*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume IX (1)**
**December - 2024**

# புறநானூறு – பாடாண்திணைப் பாடல்களில் தலைமைத்துவப் பண்புகள்

பிரியா, தே.
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி (தன்னாட்சி),
விருதுநகர்.

**Corresponding Author's mail ID:** priyad@vvvcollege.org

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்கள் மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. சங்கத்தமிழன் வாழ்க்கையை அகம், புறம் என இருவகையாகப் பகுத்து வாழ்ந்ததைப் போலவே சங்கக் காலத்து இலக்கியங்களும் அக இலக்கியங்கள், புற இலக்கியங்கள் என்று வகைமைப்படுத்தப்பட்டுள்ளன. புற இலக்கியங்கள் தனி மனிதனின் வாழ்வியல் ஒழுக்கம் தொடங்கிச் சமூகம் முழுமைக்குமான நெறிமுறைகளைத் தம்முள் கொண்டு விளங்குகின்றன. அவற்றுள், "மன்னன்" என்ற ஒற்றைத் தலைமையின் கீழ் மன்னனை உயிராகக் கருதி இயங்கிய சமூகத்தின் பதிவாக விளங்கும் புறநானூற்றுப் பாடாண்திணைப் பாடல்களில் புலனாகும் தலைமைத்துவப் பண்புகளை இனம் காண்பதாக இவ்ஆய்வு அமைகின்றது.

**குறிப்புச்சொற்கள் : புறஇலக்கியங்கள் - சமூகப்பண்பாடு – ஆளுமை – தலைமைத்துவப் பண்புகள் – பாடாண்திணைப் பாடல்கள் – மன்னன் – அதிகாரம் – புலவர்– உறவுநிலை.**

## முன்னுரை

ஒரு சமூகத்தின் பண்பாட்டைக் கட்டமைப்பதில் மொழியே அச்சாணி எனலாம். சமூகத்தில் வழங்கப்படும் மொழியின் வழியாகவே ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் ஒவ்வொரு மனிதனுக்குமான ஆளுமை அடையாளங்கள் பண்பாடுகளாக உருவெடுக்கின்றன. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என இயங்கிய காலச் சமூகத்தில் தலைமைக்கும், மக்களுக்குமான அதிகார வரம்புகளைப் புற இலக்கியங்கள் பாடாண்திணைப் பாடல்களில் பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறுகளாகப் பதிவு செய்துள்ளன. இதனைத் திறனாய்வாளர் பஞ்சாங்கம் பிரெஞ்சு நாட்டுத் தத்துவ அறிஞர் மிகயீல் பூக்கோ விளக்கமாக,

‘‘ஒரு மொழியைச் சமூக நிறுவனங்கள் தங்கள் நலத்திற்கு ஏற்பப் பயன்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட ஒரு முறையில் பெருவாரியான மக்களை வடிவமைக்க முடிகிறது என்ற அவரின் விளக்கம்தான்; அதே நேரத்தில் இதைச் செய்வது நிறுவனங்களின் அதிகாரம் மட்டுமல்ல; அதிகாரத்தை மறுக்கும் நடவடிக்கைகளும் சேர்ந்துதான்; ஏனெனில், அதிகாரம் என்பது அதிகார மறுப்பும் இணைந்த ஒன்று தான்; வேறொரு முறையில் சொல்வதென்றால் ஒவ்வொரு அதிகாரத்திலும் அதிகார மறுப்பும் பொதிந்துள்ளது. எனவே “சொல்லாடல்” ஒவ்வொன்றுக்குள்ளும் ஒன்றினுள் ஒன்றாக எழுதப்பட்டுள்ள அதிகாரத்தோடு அதிகார மறுப்பிற்கான சொல்லாடலும் சேர்ந்தே பின்னப்பட்டுள்ளது; இத்தகைய நிலையில் இந்தச் சொல்லாடலின் பிறப்பிடம் மனிதர்கள் தான் என்றாலும், இறுதியில் மனிதர்கள் இந்தச் சொல்லாடல்களால் தான் வடிவமைக்கப்படுகிறார்கள் என்கிறார் பூக்கோ’’ என்று பதிவு செய்துள்ளார். (க.பஞ்சாங்கம், புதிய நோக்கில் பழந்தமிழ் இலக்கியம், பக்.145-146). இந்த விளக்கத்தின் அடிப்படையில், புறநானூற்றுப் பாடாண்திணைப் பாடல்களில் மன்னர்- புலவர் உறவில் நிகழ்த்திக் காட்டப்படும் சொல்லாடல்கள் வழிக்கட்டமைக்கப்பட்டுள்ள அரசு - மன்னன் - அதிகாரங்களைத் தலைமைத்துவப் பண்புகளாக இனம் காண்பதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

**தலைமைத்துவம்**

ஒரு தனி மனிதனை மையமாகக் கொண்டு செயல்படும் குழுவையோ சமூகத்தையோ வழிநடத்திடும் மேன்மையான பண்புகளையும் செயற்திறன்களையும் தம்முள் கொண்டு விளங்குவதனைத் தலைமைத்துவம் எனலாம்.

அத்தலைமைப்பண்பு என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பயிற்சி முறைகளாலும் வலியுறுத்தல்களாலும் வருவதல்ல; மனிதனின் பிறப்பில் இருந்து வளரும் சூழல்களால் ஆழ்மனதில் பதிந்து தன் இயல்பினை வெளிப்படுத்தும் குணங்களாகக் கருதப்படுகின்றது.

அக்குணங்கள் ஒரு குழுவையோ சமூகத்தையோ ஒரு குறிப்பிட்ட இலக்கினை அடைவதற்கு வழி நடத்தி செல்லும் ஆற்றல் வாய்ந்த திறன்களாகப் பரிமாணம் பெறுகின்றன. அத்திறன்களை ஒருங்கே பெற்றவர்கள் உண்மை தன்மை, தொலைநோக்குச் சிந்தனை, சுமூகமான உறவு, நெகிழ்வுத்தன்மை, கலந்துரையாடல் பாங்கு, குழுவாகச் செயலாற்றும் உணர்வு என இன்னபிற உயர்ந்த பண்புகள் தம்முள் பொதிந்தவர்களாகச் சமூகத்திற்கு அல்லது வெளி உலகிற்குத் தென்படுகின்றனர்.

அத்தகைய பண்புகள் வாய்க்கப்பெற்ற ஒரு மனிதன், மன்னனாகத் தலைமைத் தாங்கி மக்களை ஆட்சிச் செய்கின்ற பொழுது அவனிடம் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கு

பண்புகளும் இன்றியமையாது இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர்,

**“அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு”**

**(குறள்-382)**

என்று சுட்டுகிறார். மேலும், மன்னன் என்பவன் காண்பதற்கு எளிமையாகவும், கடுஞ்சொற்கள் பேசாதவனாகவும் இருக்க வேண்டும் என்பதை,

**“காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்”**

**(குறள்-386)**

என்றும் வள்ளுவர் வலியுறுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது.

மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் புறநானூற்றுப் பாடாண்திணைப் பாடல்களில் காணலாகும் அரசனின் பண்புகளைத் தலைமைத்துவப் பண்புகளோடு ஒப்பிட்டு இனம் காண்பதாக இவ்ஆய்வு அமைகின்றது.

**மன்னனின் ஆற்றலும் செயலும்**

ஐம்பூதங்களைப் போன்ற ஆற்றலைக் கொண்ட மன்னனிடம் இருக்க வேண்டிய பண்புகளை,

**“ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்**
**போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்**
**வலியும், தெறலும், அணியும், உடையோய்!”**

**(புறநானூறு-2)**

என்கின்றது. அதாவது, மன்னன் நிலத்தினைப் போல் தம்மைப் போற்றாதவரையும் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். தம்முடைய ஆட்சிக்கு எதிராகக் காணப்பெறும் சூழ்ச்சிகளை வான் போல அகல ஆராய்தல் வேண்டும். வலிமையோடு பகைவரை அழித்தல் வேண்டும் தம்மைச் சார்ந்தோருக்கு அருள்நோக்கு அளித்தல் வேண்டும் என்று முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனைச் செவியறிவுறூஉவாக அறிவுறுத்திப் பாடியுள்ளார்.

**குறிப்பால் உணர்ந்து செயலாற்றல்**

ஒரு சமூகத்தின் தலைமையாக மன்னன் என்ற அடையாளத்தில் இருப்பவனுக்குக் குறிப்பறிந்து செயலாற்றும் பாங்கு அமையப் பெறுதல் வேண்டும் என்பதை இரும்பிடர்த் தலையார் என்னும் புலவர் பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதிக்கு,

**“கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி**
**நிலம் பெயரினும், நின்சொற் பெயரல்’**
**பொலங் கழற்காற், புலர் சாந்தின்**
**விலங் ககன்ற வியன் மார்ப!**
**ஊர் இல்ல, உயவுஅரிய,**
**நீர் இல்ல, நீள்இடைய,**
**பார்வல் இருக்கைக், கவிகண் நோக்கிற்**
**செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்**
**அம்பு விட, வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்**
**திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்**
**உன்ன மரத்த துன்னருங் கவலை,**
**நின்நசை வேட்கையின் இரவலர் வருவர்! அது**
**முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர்**
**இன்மை தீர்த்தல் வன்மை யானே”.**

**(புறநானூறு-3)**

என்கிறார். மன்னன் என்பவன் நிலத்தின் இயல்பு திரிந்தாலும் அவனது சொல்லில் மாற்றம் இல்லாதவனாய் இருத்தல் வேண்டும். ஆறலைக் கள்வர்களின் அம்பிற்கு இரையாகி

விடும் மாந்தர்களை உணவாக உண்டு பசியாற்றும் பருந்துகள் வாழும் பாதையே இல்லாத பகுதிகளைக் கடந்து உன்னிடம் பரிசில் பெற்றுச் செல்லலாம் என்ற விருப்பத்தோடு வருபவர்களை அவர்கள் முகத்தினைக் குறிப்பால் அறிந்து, உணர்ந்து வறுமையைத் தீர்த்து வைக்கும் கடமையில் இருந்து மாறி விடாதே என்று செவியறிவுறூஉத் துறையில், அறிவுரையை வாழ்த்தாக வழங்குவதைக் காணமுடிகின்றது.

**தன்னைத்தானே வளர்த்தெடுக்கும் மாண்பு**

சங்ககாலம் பொற்காலம் என்று கூறப்படுவதற்கு அரசன்- புலவர் உறவில் இருந்த புரிதலும் ஒரு காரணமாகும். புலவர்கள் அரசனின் ஆளுமையை மட்டும் புகழ்ந்து பாடுவதில்லை; காலம் நேரிடின் அரசனது தவறுகளையும் சுட்டிக் காட்டும் நுண்ணறிவு வாய்க்கப் பெற்றவர்களாய் இருந்துள்ளனர். அரசனும் புலவர்களது வாய்ச்சொற்களுக்குச் சினம் கொள்ளாது, தன்னைத் தானே திருத்திக் கொள்வதற்கான களமாக அதனை அமைத்துக் கொண்டமையை அதியமானைச் சிறப்பித்துக் கூறும் ஔவையின்,

**“இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய்அணிந்து**
**கடியுடை வியன்நக ரவ்வே’ அவ்வே**
**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**
**கொல்துறைக் குற்றில மாதோ; என்றும்**
**உண்டாயின் பதம்கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே.”**

**(புறநானூறு-95).**

என்ற கூற்றில் அமைந்துள்ள புறநானூற்றுப் பாடல் புலப்படுத்தி நிற்பதைக் காணலாம். தொண்டைமான் தமது ஆயுதக் களஞ்சியத்திற்கு ஔவையை அழைத்துச் சென்று தனது ஆயுதங்களைக் காண்பிக்கின்றான். அத்தருணத்தில் ஔவை அரண்மனைக் காவலில் வைக்கப்படாமல் பலமுறை போர்க்களம் கண்டு கொல்லன் படைக்கொட்டிலியில் தேய்ந்து பழுதடைந்து நுனி மழுங்கிய நிலையில் சிதைந்து இருக்கும் அதிகமான ஆயுதங்களுடன் ஒப்பிட்டுப் பாடுகின்றார். அரசன் தொண்டைமான் வலிமையைக் குறிப்பால் உணர்ந்து, போரைக் கைவிட்டு சமரசமாகச் சென்றமையையும் இலக்கியப்பதிவின் வழி அறிய முடிகின்றது.

**மன்னிக்கும் மற மாண்பு**

மன்னன் என்ற ஒற்றைத் தலைமையின் கீழ் மன்னராட்சி நடைபெற்ற காலத்தில் மன்னன் மாண்புமிக்க குணங்களும் செய்கைகளும் ஒருங்கே கூடியவனாக வாழ்ந்துள்ளான். இதற்குச் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை மோசிகீரனார், அறியாது முரசு வைக்கும் கட்டிலில் ஏறியவரைத் தண்டிக்காமல் துயில் எழும் வரை கவரி கொண்டு வீசியமையைப் புகழ்ந்து பாடியுள்ளமையைக் கூறலாம். இதனை,

**“நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை**
**அறியாது ஏறிய என்னைத் தெறுவர,**
**இருபாற் படுக்கும் நின் வாள்வாய் ஒழித்ததை**
**அதூஉம் சாலும், நற் றமிழ்முழுது அறிதல்’**
**அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்**

**மதனுடை முழவுத்தோள் ஓச்சித், தண்ணென**
**வீசி யோயே' வியலிடம் கமழ,**
**இவன்இசை உடையோர்க்கு அல்லது, அவணது**
**உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை**
**விளங்கக் கேட்ட மாறுகொல்:**
**வலம்படு குருசில்! நீஈங்குஇது செயலே?"**

**(புறநானூறு-50)**

என்ற புறப்பாடல் புலப்படுத்துகின்றது. இங்கு, முரசு கட்டில் என்று அறியாது உறங்கிய புலவருக்கு அரசனானவன் புலவர் விழித்தெழும்வரை கவரி வீசியமையை மோசி கீரனார் புகழ்ந்துரைத்துள்ளார். இதன்வழி, குற்றங்களையும் தவறுகளையும் பொறுத்தருளும் குணமும் மன்னிக்கும் பேராண்மையும் மன்னன் என்ற தலைமைக்கு இன்றியமையாத பண்புகள் என்பதைப் புலவராற்றுப்படைத் துறையாக, மோசிகீரனார் பாடாண்திணையில் அழுத்தமாக பதிவு செய்துள்ளமையைக் காணமுடிகின்றது.

**முடிவுரை**

புறநானூற்றுப் பாடாண்திணைப் பாடல்களில் புலனாகும் சொல்லாடல்களின் வழி அன்றைய சமூகக் கட்டமைப்பினை – உறவு நிலையினை உய்த்துணர முடிகின்றது. அரசன் வள்ளலாக - அருளுள்ளம் கொண்டவனாக – அறம் வழிப்பட்டவனாகக் கட்டமைக்கப்பட்டு ஏனையோர் சார்ந்து வாழும் தன்மையினராகவும் கட்டமைக்கப்பட்டிருந்த சமூக நிலையை அறிய இயலுகின்றது. ஆளும் தலைமையின் பண்புகள் வலியுறுத்தப்பட்டுள்ளமையோடு, மக்களின் எதிர்பார்ப்புகள், புலவர்களின் கூற்றுகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமையை உணர முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. சுப்பிரமணியன் ச.வே. (உ.ஆ), (2021). சங்க இலக்கியம், எட்டுத்தொகை (தொகுதி-3) மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. பஞ்சாங்கம் க (2017). புதிய நோக்கில் பழந்தமிழ் இலக்கியம், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.